NEW WAY OF BEING CHURCH

# newbec

14 னவரி 2024
பொதுக்காலம் 2ம் ஞாயிறு

## மண்ணுலகிற்கு உப்பும் உலகிற்கு ஒளியும்:

ஒன்றிப்பு (உள்ளார்ந்த), பங்கெடுப்பு (படைப்பாற்றல்) மறைத்தூது (இணைப்புப் பாலமாக) பணியில் தூய ஆவியின் துணையுடன் செவிமடுத்து, கொண்டாட்டத்துடன் இணைந்து பயணிப்பது (மாற்கு 15:16)




# திருஅவை

## இரண்டாம் வத்திக்கான்  ங்க திருஅவை கோட்பாட்டு விளக்கம்

### 21 நவம்பர் 1964 திருத்தந்தை ஆறாம் பவுல் அவர்களால் அதிகாரபூர்வமாக வெளியிடப்பட்டது.

### திருஅவையில் ஒரு ஆயரின் பங்கும் செயல்பாடும் (தொடர்ச்சி)

24. **விண்ணுலகிலும், மண்ணுலகிலும் அனைத்து அதிகாரம் ஆண்டவருக்கு அருளப்பட்டிருக்கிறது. இவரிடமிருந்து திருத்தூதர்களின் வழிவருபவர்கள் என்ற நிலையில் ஆயர்கள்** எல்லா மக்களுக்கும் கற்பித்து, படைப்பு அனைத்திற்கும் **நற்செய்தியைப்** பறைசாற்றும் பணியைப் பெற்றிருக்கின்றனர். இவ்வாறு நம்பிக்கையாலும் திருமுழுக்காலும் கட்டளைகளுக்குப் பணந்து நடப்பதாலும் அனைத்துலக மக்களும் நிறைவாழ்வு பெறுவர் (மத் 28:18; மாற் 16:15; திப 26:17-18). இப்பணியை நிறைவேற்ற, **ஆண்டவராகிய கிறிஸ்து தூய ஆவியாரை அனுப்புவதாகத் திருத்தூதர்களுக்கு வாக்களித்தார்**; அவ்வாறே பெந்தகோஸ்து நாளில் விண்ணிலிருந்து அவரை அனுப்பினார். அவரது ஆற்றலால் திருத்தூதர்கள் உலகின் கடை எல்லைவரைக்கும் நாடுகள் முன்னும், மக்கள் முன்னும், அரசர்கள் முன்னும் கிறிஸ்துவின் சாட்சிகளாக இருப்பதே இதன் நோக்கம் (திப 1:8; 2:1 தெர் 9:15). ஆண்டவர் தம் மக்களின் அருள்பணியாளர்களிடம் **ஒப்படைத்த இந்தப் பணி** உண்மையான ஊழியமாகும்; விவிலியத்தில் இது **'திருப்பணி' அல்லது தொண்டு** எனப் பொருள் பொதிந்த முறையில் அழைக்கப் பெறுகிறது (திப 1:17ம் 25ம்; உதோ 11:13; 1 திமோ 1:12).

25. **ஆயர்களின் முக்கிய அலுவல்களிலே நற்செய்தியைப் பறைசாற்றுதல் முதலிடம் பெறுகிறது**. ஏனெனில், நம்பிக்கையின் அறிவிப்பாளர்களாகச் செயலாற்றிப் புது சீடர்களைக் கிறிஸ்துவிடம் கொண்டுவருபவர்களாக ஆயர்கள் திகழ்கிறார்கள்; உண்மையான அறிவிப்பாளர்களாக அதாவது **கிறிஸ்துவின் அதிகாரத்தைப் பெற்றவர்களாக நின்று தம்மிடம் ஒப்படைக்கப்பெற்ற மக்களுக்கு அவர்கள் கொண்டிருக்கவேண்டியதும் வாழ்வில் கடைபிடிக்க வேண்டியதுமான நம்பிக்கையைப் போதிக்கின்றனர்; தூய ஆவியின் ஒளியால் அதற்கு விளக்கம் தருகின்றனர்**; உரோமை ஆயர் அதிகாரத்தை பூர்வமாகப் பேசாவிட்டாலும் அவரது உண்மையான கற்பிக்கும் அதிகாரத்திற்குத் தனிப்பட்ட முறையில் உள்ளத்தாலும் அறிவாலும் சமய உணர்வுடன் நம்பிக்கை கொண்டோர் பணிந்திட வேண்டும்; இவ்வாறு, அவரது ஒப்புயர்வற்ற ஆசிரியத்தை நம்பிக்கை கொண்டோர் வணக்கத்துடன் ஏற்றுக்கொள்ளவேண்டும்; தெளிவாகத் தெரியும் அவரது கருத்திற்க்கும் உளத்திற்கும் ஏற்ப அவர்தம் முடிவுகளை மனமாரக் கடைபிடிப்பார்களாக. அவரது உள்ளத்தை, முக்கியமாக அவர் **வெளியிடும் ஏடுகளின் பண்பிலிருந்தும், ஒரே கோட்பாட்டைப் பன்முறை அவர் எடுத்து விளக்குவதில் இருந்தும், அவர் பேசும் முறையிலிருந்தும் அறிந்து கொள்ளலாம்.**

INTERNAL CIRCULATION ONLY
BUL 02/2024

தயாரித்தவர்கள்: செய்தி ஆதாரம் இரண்டாம் வத்திக்கான் சங்க ஏடு Austin Flannery OP, 1975
திருத்தம்: மாமறைமாவட்ட மேய்ப்புப்பணி மையம் (API)
மின்னஞ்சல directorapik1@gmail.com